**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 04ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.100/2019**

காளியம்மாள் ...மனுதாரர்/வாதி

/எதிர்/

லேட்.பத்திரகாளி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 02.07.2025 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி கட்டளை 9, விதி 9ன் கீழ் மனுதாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் வழக்கை முன்னின்று நடத்தி வந்த நிலையில் மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோயினால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு வெளிமாவட்டம் சென்று நாட்டு மருத்துவம் பார்த்து வந்ததாலும், தொடர்ந்து அங்கேயே தங்கி சிகிச்சையில் இருந்து வந்ததாலும், காலகாலத்தில் வந்து வழக்கறிஞரை சந்தித்து மனுவில் ஏற்பட்டுள்ள உத்தரவின்படி Cost தொகை செலுத்தி அதற்கான மெமோவை நீதிமன்றத்தில் தாக்க்ல செய்யாத காரணத்தினால் மனு கடந்த 10.09.2024 ம் தேதி cost செலுத்தாத காரணத்தினால் மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாகவும், மேற்படி தேதியில் மனுதாரர் ஆஜராகாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்துள்ளார்.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

அசல் வழக்கின் வாதியான மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோயினால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு சிகிச்சையில் இருந்து வந்ததாலும், வழக்கறிஞரை சந்தித்து மனுவில் ஏற்பட்டுள்ள உத்தரவின்படி Cost தொகை செலுத்தி அதற்கான மெமோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் மனு கடந்த 10.09.2024 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால், மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை நிபந்தனைகளுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கினை இருதரப்பிலும் விசாரணை செய்து தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்பதால் இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இம்மனுவின் செலவுத்தொகையாக மனுதாரர் ரூ.2,000/-யை எதிர்மனுதாரருக்கு வரும் 17.07.2025 ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க 18.07.2025.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 04.07.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.07.04 16:04:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:

இல்லை.

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:

இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.07.04 16:04:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2025
in
O.S.No.100/2019

Date:04.07.2025
IA order